**+1 கணக்குப்பதிவியல் ஆண்டு இறுதித் தேர்வு மே -2022**

**சரியான விடை** **20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1.(அ) பெரியநடுத்தர வணிகம் | (ஈ) விதிப்பிழை |
| 2. (அ) ஒருகுறிப்பிட்ட நாளில் | (அ) சொத்துக்கள் |
| 3. (ஈ) இலாப நட்ட கணக்கின் பற்றுப் பக்கம் | (அ) இறுதியில் |
| 4. (இ) ரொக்க கணக்கு | (அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் |
| 5. (அ) வங்கி க/கு | (ஆ) அணுகக் குறிமுறை |
| 6. (ஈ) நடப்பு சொத்து | (இ) இருப்புக்கட்டுதல் |
| 7. (ஆ) அடுத்த ஆண்டு | (இ) ரொக்க கணக்கு |
| 8. (அ) இறுதியில் | (ஆ) அடுத்த ஆண்டு |
| 9. (அ) சொத்துக்கள் | (ஈ) நடப்பு சொத்து |
| 10. (ஈ) விதிப்பிழை | (அ) வங்கி க/கு |
| 11. (இ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரி தொடர்பான பிரச்சனைகளை தீர்த்தல் | (ஈ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது |
| 12. (அ) அனைத்து ஆண்டுக்கும் நிலையாக இருக்கும் | (அ) எடுப்பு கணக்கு |
| 13. (அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் | (ஈ) இலாப நட்ட கணக்கின் பற்றுப் பக்கம் |
| 14. (ஆ) அணுகக் குறிமுறை | (அ) அனைத்து ஆண்டுக்கும் நிலையாக இருக்கும் |
| 15. (ஈ)வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது | (அ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் |
| 16. (அ) எடுப்பு கணக்கு | (இ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரி தொடர்பான பிரச்சனைகளை தீர்த்தல் |
| 17. (அ) முதலின செலவு | (அ) பெரிய நடுத்தர வணிகம் |
| 18. (இ) இருப்புக்கட்டுதல் | (அ) ஒரு குறிப்பிட்ட நாளில் |
| 19. (இ) எதிர்பதிவு | (அ) முதலின செலவு |
| 20. (அ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் | (இ) எதிர்பதிவு |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. கணக்கியலை வரையறு** அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவீட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன் மூலம் தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது."

**22. வரவு இருப்பு:**பற்று பக்கத்தின் மொத்தத்தைவிட, வரவு பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருப்பின் அந்த இருப்பு வரவு இருப்பு எனப்படும்.

**23. இருப்பாய்வு** என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்து பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கைஆகும்.

**24. ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பு**

ஆயத்த மென் பொருள், திருத்தியமைக்கப்பட்ட மென் பொருள், உருவாக்கப்பட்ட மென் பொருள

**25. கூடியுள்ள வருமானம்:** நடப்பு ஆண்டில் ஈட்டப்பட்ட ஒரு வருமானம் அல்லது அதில் ஒரு பகுதி, அக் கணக்காண்டின் இறுதி வரை பெறப்படாமலே இருந்தால் அது கூடியுள்ள வருமானம் அல்லது பெற வேண்டிய வருமானம். இது பொதுவாக கழிவு, வட்டி, பங்காதாயம் போன்ற பெற வேண்டிய வருமானங்களுக்குப் பொருந்தும்.

**26. குறிப்பேட்டுப்பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| வங்கி க/கு ப.<br>வங்கி கடன் க/கு | 10000 | <br>10000 |
| ரொக்க க/கு ப.<br>பெற்ற கழிவு க/கு | 5000 | <br>5000 |

**27. தேய்மானத்தொகை**

**= சொத்தின் ஆரம்ப அடக்கவிலை - இறுதிமதிப்பு / எதிர் நோக்கும் பயனளிப்புகாலம்**

தேய்மானத் தொகை = (50000+5000)– 0 / 5

**தேய்மானத் தொகை = ரூ 11000**

**28. சஞ்சயின் 31.12.17க்கான வியாபர க/கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொ.சர | | 570 | விற் | 26200 | |
| கொள்முதல் | 15800 | | விற்திரு | 60 | 26140 |
| (-) கொதிரு | 90 | 15710 | இறுதிச | | 860 |
| மொ.இலாபம் | | **10720** | | | |
| | | 26960 | | | 27000 |

**29. குறிப்பேட்டுப்பதிவுகள் (விடுபட்ட தகவல்)**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| கொள்முதல் க/கு ப.<br>ரொக்க க/கு | 20000 | <br>20000 |

**30.** விற்பனை அடக்கவிலை

= தொசரக் + கொள் + நேரடிசெ - இறுதிசரக்கிருப்பு

= 10000 + 80000 + 7000 - 15000= ரூ **82000**

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

| | | |
|---|---|---|
| **31.ஆள்சார் கணக்கு** | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| **சொத்து கணக்கு** | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| **பெயரளவு கணக்கு** | அனைத்து நட்டங்களையும் செலவுகளையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்க. |

**32. தொடக்கப் பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| ரொக்க க/கு ப. | 40000 | |
| சரக்கிருப்பு க/கு ப. | 50000 | |
| ராஜி க/கு ப. | 50000 | |
| இயந்திரம் க/கு ப. | 40000 | |
| ஹரி க/கு | | 30000 |
| **முதல் க/கு** | | **150000** |

**33.**

| **பற்று இருப்புகள்** | **வரவு இருப்புகள்** |
|---|---|
| வெளித்தூக்குக் கூலி | வாடகை பெற்றது |
| கூலி | முதல் |
| விற்பனைத்திருப்பம் | விற்பனை |

**34.** **விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | இ எண். | பே. ப.எ | விளக் | தொகை |
|---|---|---|---|---|---|
| 2017 ஆக1 | செந்தில் | 68 | | | 23000 |
| 4 | மணி | 74 | | | 10500 |
| 25 | கமலா | | | 10x1500<br>20x200 | 19000 |
| | | | **மொத்தம்** | | **52500** |

**35.** **.... நாளுக்குரிய முப்பத்தி ரொக்கஏடு**

| நா | விவ | த | ரொ | வ | ந | விவ | த | ரொ | வ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

**36. முதலாமாண்டு தேய்மானத்தொகை**

**= தேய்மான விகிதம் X சொத்தின் அடக்கவிலை**
**100**

$\frac{15 \times 50000}{100}$ **= ரூ 7500**

**இரண்டாமாண்டு தேய்மானத்தொகை**

**= தேய்மான விகிதம் X சொத்தின் அடக்கவிலை**
**100**

$\frac{15 \times 42500}{100}$ **= ரூ 6375**

| | |
|---|---|
| முதலாமாண்டு தேய்மானம் | **7500** |
| இரண்டாமாண்டு தேய்மானம் | **6375** |
| மொத்தம் | **13875** |

**37. கணினி அமைப்பின் உள்ளீட்டுசாதனங்கள்:-** விசைப்பலகை, ஒளியியல் வருடி, சுட்டி, இயக்கப்பிடி, தொடுதிரை, எழுத்தாணி

**வெளியீட்டுசாதனங்கள்** திரையகம், அச்சுப் பொறி

**38. சரிக்கட்டுப் பதிவுகள்:** கொடுபட வேண்டிய செலவினங்கள், முன்கூட்டிச் செலுத்திய செலவினங்கள், பெற வேண்டிய வருமானங்கள் மற்றும் முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள் போன்ற இருப்பாய்வில் அக்கணக்காண்டின் இறுதியில் எடுத்துக் கொள்ளப்படாத நடவடிக்கைகளுக்காக செய்யப்படும் குறிப்பேட்டுப் பதிவே, சரிக்கட்டுப் பதிவு எனப்படும

| 39. அடிப்படை | முதலினவரவு | வருவாயினவரவு |
|---|---|---|
| தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது. | அடிக்கடி நிகழும் தன்மையுடையது. |
| அளவு | பெரும்பாலும் பேரளவிலான தொகையாக இருக்கும் | சிறிய அளவிலான தொகையாக இருக்கும். |
| பகிர்வு | இத் தொகையை இலாபமாக கருதி பகிர்ந்தளிக்க முடியாது. | வருவாயின செலவைக் காட்டிலும் மிகுதியான வருவாயின வரவுகள் இலாபமாகக் கருதிப் பகிர்ந்து அளிக்கப்படும். |

**40. இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| அலு வாட | | 10000 | மொத்தஇலா | 50000 |
| தள் கொடு | | 12000 | வட்டி பெற் | 2000 |
| விளம்பரம் | | 4000 | | |
| தணிக் கட் | | 1000 | | |
| வெளிதூக் | | 2500 | | |
| பொதுசெ | | 3000 | | |
| **நிகர லாபம்** | | **19500** | | |
| | | 52000 | | 52000 |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. குறிப்பேட்டுப் பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| ரொக்க க/கு ப.<br>ராம் முதல் க/கு | 300000 | <br>300000 |
| வங்கி க/கு ப.<br>ரொக்க க/கு | 200000 | <br>200000 |
| அறைகலன் க/கு ப.<br>ஜெயா நிறுவன க/கு | 28000 | <br>28000 |
| கொள்முதல் க/கு ப.<br>வங்கி க/கு | 5000 | <br>5000 |
| கொள்முதல் க/கு ப.<br>சியாம் க/கு | 50000 | <br>50000 |
| ஜெயா நிறுவன க/கு ப.<br>ரொக்க க/கு | 28000 | <br>28000 |
| எடுப்பு க/கு ப.<br>ரொக்க க/கு<br>(உரிமையாளரின் மின்கட்ட) | 2000 | <br>2000 |
| எடுப்பு க/கு ப.<br>வங்கி க/கு | 800 | <br>800 |
| மனோ க/கு ப.<br>விற்பனை க/கு | 20000 | <br>20000 |
| விற்பனைதிருப்ப க/கு ப.<br>மனோ க/கு | 5000 | <br>5000 |

**41.ஆ. . கணேசின் 1.1.17க்கான வியாபர க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ.சர | | 8000 | விற்பனை | 42000 |
| கொள்முதல் | | 22000 | இறுதிசரக் | 4500 |
| கொ செ | | 2500 | | |
| மொ.இலாபம் | | **14000** | | |
| | | 46500 | | 46500 |

**. . கணேசின் 1.1.17க்கான இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிசார்செ | | 3500 | மொத்தஇலா | 14000 |
| விற் மீ செ | | 1000 | | |
| வாராகடன் | | 1200 | | |
| வியாபாரசெ | | 1200 | | |
| அளித் தள் | | 600 | | |
| கழிவு கொ | | 1100 | | |
| விற் செ | | 600 | | |
| அலு பழுது | | 600 | | |
| **நிகர லாபம்** | | **4200** | | |
| | | 14000 | | 14000 |

**42.அ. குறிப்பேட்டில் பதிவு செய்தல்**

| நாள் | விவரம் | பற்றுரூ | வரவுரூ |
|---|---|---|---|
| 2017<br>ஆ10 | ரொக்கம் க/கு ப.<br>விற்பனை க/கு | 30000 | <br>30000 |
| 14 | கோபி க/கு ப.<br>விற்பனை க/கு | 12000 | <br>12000 |
| 20 | ரொக்கம் க/கு ப.<br>கோபி க/கு | 12000 | <br>12000 |

**ரொக்க க/கு**

| நாள் | விவரம் | தொகை | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| ஆ10 | விற்பனை க/கு | 30000 | ஆ31 | இருப்புகீ/இ | 42000 |
| 20 | கோபி க/கு | 12000 | | | |
| | | **42000** | | | **42000** |
| **செ 1** | **இருப்புகீ/கொ** | **42000** | | | |

### விற்பனை க/கு

| நாள் | விவரம் | தொகை | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| ஆ31 | இருப்புகீ/இ | 42000 | 10 | ரொக்க க/கு | 30000 |
| | | | 14 | கோபி க/கு | 12000 |
| | | **42000** | | | **42000** |
| **செ 1** | **இருப்புகீ/கொ** | 42000 | | | |

| 42 ஆ. அடிப்படை | முதலினச் செலவு | வருவாயினச் செலவு |
|---|---|---|
| தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது. | அடிக்கடி நிகழும் தன்மை உடையது |
| நோக்கம் | வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பது | வியாபாரததின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வது |
| பயனளிப்புக் காலம் | இச் செலவின் பலன், நீண்ட காலத்திற்கு கிடைக்கும். | நடப்பு ஆண்டிற்கு மட்டுமே பலன் தரக்கூடியது. |
| இலாபம் ஈட்டும் திறனில் ஏற்படுத்தும் விளைவு | இலாபம் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்யும். | இலாபம் ஈட்டும் திறனை, பராமரித்து வைத்துக் கொள்ள உதவும். |
| கணக்கியல் நடைமுறை | இருப்புநிலைக் குறிப்பில் சொத்து பக்கத்தில் தோன்றும். | நேரடிச் செலவுகள் வியாபாரக் கணக்கின் பற்றுக் பக்கத்திலும், மறைமுக செலவுகள் இலாபநட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும் தோன்றும். |

### 43.அ. பாபு என்பவரின் இருப்பாய்வு

| விவரம் | பற்று இருப்பு | வரவு இருப்பு |
|---|---|---|
| கை ரொக்கம் | 7000 | |
| கடனாளிகள் | 5400 | |
| சம்பளம் | 6800 | |
| வாராக்கடன் | 200 | |
| தொடக்கசரக்கிருப்பு | 15400 | |
| பெ.மா.சீட்டு | 7000 | |
| கடனீந்தோர் | | 11800 |
| முதல் | | 25000 |
| கொள்முதல் | 45000 | |
| விற்பனை | | 50000 |
| **மொத்தம்** | **86800** | **86800** |

### 43.ஆ. நிக்கோலஸ் என்பவரின் வியாபார லாபநட்ட ககு

| விவரம் | தொகை | தொகை | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| தொ.சரக்கி | | 1000 | விற்பனை | | 15100 |
| கொள்முதல் | | 10000 | இறுதி சரக் | | 2100 |
| கூலி | 600 | | | | |
| (கூ) கொடு | 200 | 800 | | | |
| உள்ஏற்றிசெ | | 750 | | | |
| **மொ.லாபம்** | | **4650** | | | |
| | | **17200** | | | **17200** |
| | | | **மொ.லாபம்** | | **4650** |
| விளம்பரம் | 500 | | பெ.கழிவு | 1900 | |
| (க) மு.கூ.செ | 150 | 350 | க:- மு.பெற் | 400 | 1500 |
| வெ.தூ.கூ | | 400 | பெ.வாடகை | | 600 |
| **நி.லாபம்** | | **6000** | | | |
| | | **6750** | | | **6750** |

### 44.அ. கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | தொகை | |
|---|---|---|---|
| | | விளக்கம் | மொத்தம் |
| ஜீன்1 | பாலு நிறுவனம்<br>20 நாற்காலி 1ரூ.150 (20 X 150) | | 3000 |
| 13 | சுபா | | |
| | 2 அலமாரிகள் (2 X 3100) | 6200 | |
| | 10 மேசைகள் (10 X 1500) | 15000 | |
| | | 21200 | |
| | கழி:- வியாபார தள்ளுபடி 10 % | 2120 | |
| | | 19080 | |
| | கூட்:- சரக்கு தூக்கு கூலி | 220 | 19300 |
| 24 | சங்கர் 25 அலமாரி (25 X 1300) | | 32500 |
| 27 | முருகன் 10 மேசை (10X3275) | | 32750 |
| | **கொள்முதல் ககு** | | **87550** |

### கொள்முதல் திருப்பக் கணக்கு

| நாள் | விவரம் | தொகை |
|---|---|---|
| ஜீ21 | பாலு நிறுவனம் 2 நாற்காலிகள் (2 X 150) | 300 |
| 29 | சங்கர் 3 அலமாரிகள் (3 X 1300) | 3900 |
| | **கொள்முதல் திருப்ப கணக்கு** | **4200** |

### 44.ஆ. கணபதி என்பவரின் முப்பத்தி ரொக்க ஏடு

| நா | விவரம் | வங்கி | தொ | ந | விவரம் | வங்கி | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| 1பி | இகீகொ | 5000 | 12500 | 5 | தண்ணீர் | 4000 | |
| 8 | டேனிய 50 | | 4450 | 6 | கொள்முதல் | | 4500 |
| 10 | விற்பனை | 20000 | | 12 | அமலா 250 | 7250 | |
| 14 | வங்கி | | 10000 | 13 | போக்குவரத் | | 2500 |
| 19 | குமார் | 7500 | | 14 | ரொக்கம் | 10000 | |
| | | | | 24 | குமார் | 7500 | |
| | | | | **31** | **இருப்புகீஇ** | **3750** | **19950** |
| | **50** | **32500** | **26950** | | **250** | **32500** | **26950** |
| **மா1** | **இகீகொ** | **3750** | **19950** | | | | |

### 45.அ. சுந்தராஜன் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏடு

| நாள் | விவரம் | தொகை | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| மே1 | இருப்பு கீகொ | 40000 | மே7 | கூலி ககு | 2000 |
| 5 | ஸ்வாதி ககு | 4000 | 10 | கொள்முதல் | 6000 |
| 15 | விற்பனை | 9000 | 18 | கணிப்பொறி | 15000 |
| 30 | வட்டி | 500 | 22 | சபாபதி | 5000 |
| | | | 28 | சம்பளம் | 2500 |
| | | | **31** | **இருப்புகீஇ** | **23000** |
| | | **53500** | | | **53500** |
| **ஜீன்1** | **இருப்பு கீகொ** | **23000** | | | |

| 45.ஆ. கணக்கின் பெயர் | வகை |
|---|---|
| i) வங்கி | ஆள்சார் க/கு |
| ii) வெளிஏற்றிச் செல் செலவு | பெயரளவு க/கு |
| iii) கொள்முதல் | சொத்து /பெயரளவு க/கு |
| iv) ஹரிஷ் | ஆள்சார் க/கு |
| V)முன்கூட்டி செலுத்திய செலவு | பிரதிநிதிதுவ ஆள்சார் க/கு |
| vi) அறைகலன் | சொத்து க/கு |
| vii) நற்பெயர் | சொத்து க/கு |
| viii) விற்பனை | பெயரளவு க/கு |
| ix) வட்டி பெற்றது | பெயரளவு க/கு |
| x) முதல் | ஆள்சார் க/கு |

**46.அ. தேய்மான வரைவிலக்கணம்:** ஸ்பைசர் மற்றும் பெக்லரின் கூற்றுப்படி,"தேய்மானம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் எக் காரணத்தாலும் ஏற்படும் ஒரு சொத்தின் பயனளிப்புகால இழப்பைக் குறிக்கும் ஒரு அளவாகும்.

**தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் 1.தேய்வு மற்றும் உராய்வு:-** சாதாரணமாகவும் புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.

**2.காலப்போக்கு:-** காலப் போக்கு காரணமாக ஒரு சில சொத்துக்களை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும் அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.

**3.பராமரிப்பின்மை:-** சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது. சொத்துக்கள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால் அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.

**46.ஆ.** வினோதினி என்பவரின் வியாபார இலாப நட்ட கணக்கு

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| தொ.சரக்கிருப்பு | 2500 | விற்பனை | 7000 |
| கொள்முதல் | 3300 | இறுதி சரக்கிருப்பு | 4000 |
| கூலி | 2700 | | |
| **மொத்த லாபம்** | **2500** | | |
| | **11000** | | **11000** |
| | | மொத்த லாபம் | 2500 |
| சம்பளம் | 2600 | பெற்ற தள்ளுபடி | 2500 |
| **நிகர லாபம்** | **2400** | | |
| | **5000** | | **5000** |

**இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|---|
| முதல் | 52000 | | இயந்திரம் | 52000 |
| கூட்:- நி.லாபம் | 2400 | 54400 | வங்கி ரொக்க | 6400 |
| கடனீந்தோர் | | 8000 | இ. சரக்கிருப்பு | 4000 |
| | | **62400** | | **62400** |

**47.அ. நவீனவணிகஉலகில் கணக்காளரின் பங்களிப்பு**

**1.ஏடுகளைப் பராமரிப்பவர்:-** நிதிசார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவுசெய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.

**2.நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர்:-** முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிசார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.

**3.வணிகச் சொத்துக்களின் காப்பாளர்:-** சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம் நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது. சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

**4.நிதி ஆலோசகர்:** கணக்காளர் நிதி சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து வணிக மேலாளருக்கு தேவையான ஆலோசனை வழங்குகிறார்.

**5. மக்கள் தொடர்பு அலுவலர்:** தேவைப்படும் பயனீட்டாளருக்கு கணக்கியல் பகுப்பாய்வு செய்ய தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்.

**47.ஆ.**

| | |
|---|---|
| நிலைச்சொத்துகள் வாங்குவதற்காக இயக்குனரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ரூ 10000 | **முதலினச் செலவு** |
| பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை | **வருவாயின வரவு** |
| புதிய கட்டிடம் கட்ட பழைய கட்டிடம் இடிக்க செலவு | **முதலினச் செலவு** |
| தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்கு பெறும் காப்பீடு தொகை | **முதலின வரவு** |
| வாகனத்தின் எரிபொருள் திறனை அதிகரிக்க அதன் இயந்திரததை புதுபிக்க செலவு ரூ 25000 | **முதலினச் செலவு** |

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com